ஆனால், அந்த நிலத்தை அரசாங்கத்திற்குத் தருவதற்குத் தயாராக இருந்தாலும், அந்த இடத்தை அப்படித் தந்தால், அங்கே ஒரு இரும்புப் பட்டறை வைத்து, ஷூட்டிங் நடத்துவதற்கு இடைஞ்சலாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதலிலே, அந்த இடத்தை கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து வெற்றி பெறுமானால் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பற்றிப் பரிசீலிக்கலாம். அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம், அரசாங்கத்திற்கு வந்த பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது சொல்லப்படுகிற அந்த நிலம் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்று சொல்லி ரொம்ப நாளாயிற்றே, அதைக் கொடுப்பதிலே ஏதாவது தகராறு இருக்கிறதா ? அல்லது, கொடுக்கிறேன் என்று சொன்னவர்கள் ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கிறார்களா ? அதைப்பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா ? அப்படிக் கொடுக்காவிட்டால், எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு அதிகாரப் பூர்வமாகத் தகவல் ஒன்றுமில்லை.

Kuzhithurai House Mortgage Bank.

*756 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Presidentship and Board of Directors of the House Mortgage Bank Y-335 Kuzhithurai, Kanyakumari district is kept vacant for a long time; and

(b) if so, the reasons for the delay?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) 4—10—1973 அன்று வீட்டு வசதி வாரியத் தலைவரால் (கூட்டுறவுப் பிரிவு) புதிய குழு ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டு, தற்போது பொறுப்பேற்றிருக்கிறது.

புதிய குழு நியமிப்பதில் நிர்வாகக் காரணங்களால் தாமதம் ஏற்பட்டது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டபொழுது, குழித்துறை ஹவுஸ் மார்ட்கேஜ் பேங்க், தலைவர், டைரக்டர், மற்றவர்கள் ஓராண்டாக நியமிக்கப்படாமலிருந்தார்கள். அதனால், பில்டிங் லோன் அப்ளிகேஷன்ஸ் டிஸ்போசல் செய்யப்படாத நிலைமை இருந்தது. ஆதலால், இவ்வித காலதாமதம் ஏற்படாமல் இருக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருந்த நிர்வாகிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் மலிந்துவிட்ட காரணத்தினால் முதலிலே 3 டைரக்டர்கள் ராஜிநாமா செய்தார்கள். அதன் பிறகு, தலைவர் ராஜிநாமா செய்தார். அதெல்லாம் மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு புதுக் குழு உருவாயிற்று. ஏறக்குறைய ரூ. 1,26,000 கடன்களும் பெற்று, பலபேர் வீடுகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

Meeting of Labour Advisory Committee

*757 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether the State Labour Advisory Committee has met about the end of Janury 1973; and

(*b*) if so, the details of the recommendations of the Committee?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) போவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: லேபர் லாஸ் அப்ளை செய்யாத நிறுவனங்களில் வேலை செய்கின்றவர்கள் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய வேலைக்கும் உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. அவர்களுடைய நிலைமையை கவனிக்க அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

@ 273–274-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.